1087

நாடர் வெளியீடு கீதம். 3.

சமரச சன்மார்க்க வழிகாட்டும்,

# சுயமரியாதைக் - -
# - - கீர்த்தனம்.

காயாமொழி குமரகுருபரர் யாத்தது.

OFFICE OF THE ... No. ...099

விற்குமிடம்.

A. K. GURU,
69, BARBERS BRIDGE MYLAPORE,
MADRAS.

1929.

O-, 1MKK7,S
N29
183543

[உரிமை எமதே.

ஆதித்த நிமிடக்கவி—பௌத்திரர்.



காயாமொழி—குமரகுருபரர்.

யாத்த

# சுயமரியாதைக் கீர்த்தனம்.


கிடைக்குமிடம்.

A. K. GURU,
69, BARBERS BRIDGE MYLAPORE,
MADRAS.

1929


விலை அணு 3.] [உரிமை எமதே.

திராவிடன் ஆசிரியர்.

திரு. ஜனகசங்கர கண்ணப்பர் வரைந்த

# நூன்முகம்.

---

நமது கெழுதகை நண்பர் திரு-காயாமொழி குமர குருபரர் "சுயமரியாதைக் கீர்த்தனம்" என்ற பாடல்கள் பாடி, அவைகளை மிக அழகாய்ப் புத்தக வடிவாய் வெளி யிட்டு நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றார்; நாம் அப்பாக் களை மிகக் கூர்ந்து நோக்கினோம். அப்பாக்கள் நம் சுயமரியா தைக் கொள்கைகளைத் தெள்ளத் தெளிய விளக்குகின்றன.

சுயமரியாதை இயக்கம் மக்களிடைப்பரவ வேண்டுமா யின், இத்தகைய பாடல்கள் இன்றியமையாததென்றே நாம் சொல்வோம். ஏனெனின், வசனங்களைக் காட்டிலும் பாடல் கள் மக்களின் உணர்ச்சியை மிகுதியும் எழுப்புவனவாய் இருக்கின்றன. உலகத்தில் பல இயக்கங்களெல்லாம் பாடல் களாலேயே உரம் பெற்றன வாகலின், நம் சுயமரியாதை இயக்கம் வளர்வதற்கு நாம் இப்பாடல்களை மனமுவந்து வரவேற்கின்றோம்.

ச. ச. க.

## சித்தர் பாடல்.

1. வேத மோதாதே அகப்பேய்
   மெய்கண்டோ மென்னாதே
   பாதம் நம்பாதே அகப்பேய்
   பாவித்துப் பாராதே

2. சாத்திர சூத்திரமும் அகப்பேய்
   சங்கற்பமான தெல்லாம்
   பார்த்திட லாகாதே அகப்பேய்
   பாழ்பலங் கண்டாயே

3. இறையவ னென்றதெல்லாம் அகப்பேய்
   எந்த விதமாகும்
   அறையவே நீகேளாய் அகப்பேய்
   ஆனந்தமானதடி

(அகப்பேய்சித்தர்.)

# காலநீதி.

இந்தியாவிலே கீழுஞ்சுட மேலுஞ்சுட, நெஞ்சுலர்ந்து, நாவறண்டு, வயிறு ஒட்டிப்போய்க் கஞ்சியோ, கஞ்சியோ வென்று பல்லாயிரம்பேர் கதறுகிறார்களே. வயிற்றுக்குக் கஞ்சியில்லாமல் வருந்துவோருக்கு, வேதாந்தம் உபதேசித்தல் அவரை அவமானப் படுத்தியதாகுமன்றோ.

விவேஹானந்தர்.

உங்கள் தேசத்தின் க்ஷேமத்தை முதலில் கவனியுங்கள். இப்பொழுது நமக்கு வேண்டியது அத்வைதங் கூட அன்று. முதலில் அவ்வளவு வயிற்றுக்கு அன்னங் கிடைக்கட்டும். ஞானத்தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நம்மவர்களின் மண்டையில் மட்டுக்கு மிஞ்சின மதவிஷயங்களை ஏற்கெனவே திணித்து வைத்திருக்கிறோம். அவர்களோ பாவம்! பசிப்பிணியால் வருந்துகிறார்கள். வயிறு பசியால் வாடும்போது வேதாந்தம் ஏறுமா.

விவேஹானந்தர்.

நமது நாட்டிலே சமூக விஷயங்களும் ராஜ்ய விஷயங்களும் ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கின சம்பந்த முள்ளவைகளாதலால் மதவிஷயங்களை அரசியல் துறையில் கொண்டுவரலாகாதென்பதற்கு அர்த்தமே கிடையாது.

மதவிஷங்களை அரசியல் துறையில் புகுத்துவது வகுப்புவாதமென்று கூறுவதெல்லாம் அனுபவத்திற்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்தாத பித்தலாட்டமே யாகும்.

எல்லா மதத்தாரும் விபசாரத்தை ஒழிக்கப் பெருமுயற்சி செய்து வருகின்றார்கள். ஆனால் நம் நாட்டிலோ விபசாரம் மதசம்மந்தமுடையதென்று சொல்லக்கூடிய சத்தியமூர்த்தி கூட்டத்தாரிருக்கின்றனர். இத்தகைய நாடு எவ்வாறு விடுதலையடைய முடியும்?

ஜனக சங்கர கண்ணப்பர்.

உலகத்தில் இருந்துவரும் பெரும் பான்மையான தொல்லைகட்கு, மக்களின் பகுத்தறிவை அடக்கி அறியா மையில் ஆழ்த்தி அதன் மூலம் தங்கள் வயிற்றை நிறப்ப மார்க்கங்கள் செய்துகொண்டு வாழும் மூடர்களான குருமார் களும் புரோகிதர்களுமே முக்கிய காரணஸ்தர்கள். உல கத்துக்குப் பாரமாகவும் இழிதன்மைக்கு உதாரணமாகவும் இருந்துவரும் இந்தக் குருமார்களையும் புரோகிதர்களையும் நான் அழிப்பதுபோல் இந்தியாவும் அடியோடு அழிப்ப தற்கு முயற்சி செய்தா லொழிய அது ஒருக்காலும் முன் னேறப் போவதில்லை.

அமீரின் புத்திமதி குடியரசு.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக மக்களின் நிலை குலைந்து வருவதையும் தேசம் அடிமைப்பட்டு வருவதையும் தொடர்ச்சியாகக் கேட்டும் பார்த்தும் வந்தும் கொஞ்சமா வது அறிவு என்பதை உபயோகப்படுத்தி இதன் காரணங் கள் என்ன என்பதைக் கவனிக்காமலும், அக்கம் பக்கம் எப்படி இருக்கின்றதென்பதை ஒரு சிறிதும் திரும்பிப் பாராமலும் மக்களைச் சமயம், சமயாச்சாரி என்பதையே குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டே நாசமாய்ப் போகச் செய்வதால், யாருக்கு என்ன நன்மை விளையக் கூடும்?

சாமியின் மூலமும், சமயத்தின் மூலமும், சமயாச்சாரி கள் நடத்தையின் மூலமும் மக்களுக்கு ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலத்தையும் கற்பிக்கலா மென்று யாராவது சொல்ல வருவார்களானால், அவற்றை எல்லாம் விட்டுவிட்டு நேரே ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலங்களையும் கற்பிப்பதால் என்ன நஷ்டம் விளைந்துவிடக் கூடும்?

ஈரோட், இராமசாமி நாயகம்.

# சுயமரியாதைக் கீர்த்தனம்.

## 1. தேவ சமத்துவம்.

(சாணகம லாலயத்தை-என்ற மெட்டு.)

1. உலகமுழு தாயசக்தி உளமறிய லாகாவிதம்
ஓரிடமே வாசமென்ன உரையாது
உத்தமர்க்கும் அதமர்கட்கும்
உயர்ந்தவர்க்குந் தாழ்ந்தவர்க்கும்
ஓரளவும் பேதமில்லென் றுரைகூற

2. பலகதிரின் ஞாயிறொளி பரவிவிழும் மழையின்றுளி
பார்க்கமுடி யாதவிளி சமமாக
பற்பலர்க்கும் பலன்கள்தந்து
நிற்பதையே நன்சறிந்தும்
பாகுபாடு கள்பிரித்துக் கொளலேனே

3. மலமுறுமோர் மாமனனே மறையவனென் றேயழைத்து
மண்ணில்விழுந் தேபுகழ்ந்து பணியாதே.
மனைநிகழ்வி ழாக்களாகும்
மணமுதலா மரணம்வரை
மற்றவர்க்குப் பொருள்கொடுத்து மகிழாதே

4. சலனமடை யாதிருந்து சலநிலநிகழ் வுணர்ந்து
சர்வவல்ல சக்திஒன்றென் றடிபேணி
சகலருஞ்ச கோதரமாய்
சமரசமே சீர்மதமாய்
சங்கங்கூட்டி எய்வோம்சுய மரியாதை.

## 2. சுயமரியாதை.

(சுஜனஜீவனு-என்ற மெட்டு.)

பல்லவி.

சுயம ரியாதை கொண்டால்
தொலையு முபாதை நாடு (சுய)

அநுபல்லவி.

பயமற்ற பாதை இதால்
பலன்பெற் றோர்மேதை கொடும்
பற்றலர்க் கஞ்சி விட்டவர் என்றும் பழிப்புறு பேதை
(நாடு-சுய)

சரணம்.

சங்கம் சண்ட துங்கன் ராம சாமி நாயகம்
எங்கு மிதனல் பொங்கும் க்ஷேமம் எங்கள் தாயகம்
நமக்கேற்ற மார்க்கம் இது
நல்கும் நல்ஆக்கம் கையில்
கரவில் ஜெய முரசின்குடி அரசுக்கேன் தேக்கம்
(நாடு-சுய

## 4. சமதர்மம்.

(பாலாபிஷேகம்-என்ற மெட்டு.)

சாதாரணமான வாழ்க்கைச்ச மதர்மம்
ஜகத்தினர் ஈடேறும் சன்மார்க்கம்
ஆதார மில்வேத ஆரியருக்கிங்கு
ஆகுமாமோ இனி நல்லாக்கம்

தொகையறு.

வேதாகமங்களில் விற்பன முளதோ வெனப்பார்.
மேதாவியாமெனப் பிறப்பினுற் கூறினலதைத்தீர்.

முடுகு.

அன்னப் பாலெகன ஆதர வாகும்
கண்ணப்பர்தரு கலைகளை ஓதும்.

பாட்டு.

அந்தியும் பகலும் சிந்தனை புரிந்தே
ஆதார மார்க்கமே ஓதுகின்றார் (சாதா)

தொகையறு.

வைதீகக் கொடுமைக்கு வாய்த்தநல் அராவிடமே
லௌகீக சன்மார்க்க விருத்திக்குத் திராவிடனே

முடுகு.

உத்தமர் போற்றிடும் ஒருதின சரியே
ஓதுவ துணர்ந்துநீ நல்லதைப் புரியே

பாட்டு.

நித்தியம் விருத்திக் காதர வானதைப்
பத்திபத்தியாகப் போதிக்கிறார் (சாதா)

## 4. கேட்டின் காரணம்.

(உடுமலை முத்துசாமி பாட்டை-என்ற மெட்டு)

1. என்றுந்த மிழ்வளர்ந்த நாடு இன்று
இதற்குள் வந்தது சீர் கேடு தம்மில்
இருந்தபெ ருமைகளை மறந்துபி றரில்மோகம்
கொண்டார் இன்பம் விண்டார்.

2. ஆரியரின் போதனையாற் கெட்டு எண்ணில்
அடங்காத் தெய்வவழி பட்டு கொடும்
அசட்டுத்த னக்கதைகள் புரட்டுஉருட்டை நம்பி
வாழ்ந்தார் மிகத் தாழ்ந்தார்.

3. தன்னலத்தை மனத்தினிற் கொண்டு உய்ய
வரைந்தனர் சாஸ்திரங்கள் பண்டு அவர்
தாமே தெய்வமென்றும் நாமேஅ டிமைஎன்றும்
மொழிந்தார் நம்மை இழிந்தார்.

4. நம்பிப்ப டித்துநாமே கெட்டோம் அ
நாகரிகத் தைக்கை தொட்டோம் இனி
நாமும் மேன்மைபெற நாடும் சீர்மையுற
செய்வோம் உண்மை எய்வோம்.

5. அவசிய மானதையே கொண்டு தீய
அர்த்த மற்றவற்றை விண்டு நாம்
ஆடிய கொடிய மூடவ ழக்கங்களை
விடுவோம் மேன்மைப் படுவோம்.

## 5. புராண உற்பத்தி.

(கோச்சிமலை குடகுமலை-மெட்டு)

1. எந்தநாளும் நந்தமிழர் இறையிலன்பு பூண்டார்
ஈந்தருந்தி இருந்தவிடம் இயற்கை அழகுங் கண்டார்
அந்தநாளில் ஆரியர்கள் வந்து சிலரை வென்றார்
ஆங்காங் கெங்கும்பரவி தாம்வதிந்து கொண்டார்

2. இற்றைநாளில் இந்தியர்க்கு வெள்ளையர்கள் போல
இருந்தனரே தமிழருக்கு ஆரியர்கள் மேலே
முற்றுமவர் கலைகளனுட் டானங்கொண்ட தாலே
முழுஅடிமை ஆக்கிவைத்தார் தம்மதத்தி னாலே

3. பற்பலவி டங்களிலும் பரவியவட நாட்டார்
பக்கத்துள்ள நிகழ்ச்சிகளைப் பலரிடமுங் கேட்டார்
சொற்கள்பல கூட்டியிரு சரித்திரங்கள் தொகுத்தார்
சூழ்ச்சியாகத் தான்தொழுத சுவாமிகளைச் சேர்த்தார்

4. லௌகீக விருத்திக்காக நாவல்பல இன்று
ஞானமுள்ள சிலமனிதர் தாம்வரைவ துண்டு
வைதீகம் பரவுதற்கு ஏதுவாக அன்று
வரைந்தகதை புராணசாஸ்திரம் ஆகும்நினை என்றும்

5. தமதுஜாதி ஆதிக்கத்தைத் தரையிலென்றும் பேண
தந்தனரே கதையிற்றம்மை உயர்பிறப்பாய்த் தோண
அமலமன தமிழ்மக்களும் ஆண்டவனைக் காண
அதுவேவழி எனவேநம்பி அடிமையானார் ஏனோ.

## 6. மொழி, நாடு, ஜாதி, சமயம்.

(இடும்பன் பாட்டு-மெட்டு)

1. ஒழுக்க மில்லாத ஹிந்து உத்தர பூமியரின்
வழுக்கள் தோன்றாது அவரை வழிபடுதல்வனோ

2. செந்தமிழ் நாடே நாமே ஜெனித்தவீடாகும்
சிந்துபாய்பூமியல்ல இனிமேல் இந்தியன் என்றுசொல்லீர்

3. ஹிந்தி தெரியாது பிறந்ததும் சிந்துக் கரையிலல்ல
தமிழிலேபிறந்தோம் இனிமேல் தமிழன் என்றுசொல்வோம்

4. ஆயிரந் தேவர்கொண்ட இந்து ஆபாசமார்க்கமல்ல
நியாயமார்க்க மென்றே நாட்டிற்கு நல்லனசெய்து வாரும்

5. பிறப்பிலே பேதம் இல்லெனப் பூரணமாக நம்பி
சிறப்பு செய்கையையே சார்வதை ஜெகத்திற் காட்டிடுவோம்

## 7. பெண்ணின் பெருமை.

(ஆண்டிப்பண்டாரம்-மெட்டு)

பல்லவி.

தாழ்ந்த தன்மையரோ பிறரைச்
சார்ந்த பொம்மையரோ பெண்டிர் (தாழ்)

சரணம்.

1. ஆடவர்க்குச் சமமாக அந்நிய பாடையிலும்
ஏடவிழ்த்துப்பலபடித்து எப்.எ; பி.எ; எம்.எ; பெறும்
நாள் (தாழ்)

2. ஆண்பெண் என இரண்டு ஆண்டவன் வகுத்ததுண்டு
சாண்எட்டு இருவரிலும் சரியேயாகும் பேதமில்லை ()

3. அண்டத்தே வாழுகின்ற ஆண்மக்கள் யாவரையும்
பெண்டுக ளன்றோஇங்கு பெற்றுவளர்த்துத் திருத்தி
விட்டார் (தாழ்)

4. யுக்திகள் பலசொல்லுவார் யுத்தக்கள முஞ்செல்லுவார்
பக்தியி லுறுதிகொள்வார் பலமுங்குணமும் நலமுந்
தருவார் (தாழ்)

5. வைக்கீல்பா ரிஸ்டர்என்றும் வைத்தியர் சர்ஜன்என்றும்
உபாத்தினி பண்டிதையாய் வழுக்களின்றி தழைக்கும்
நாளில் (தாழ்)

## 8. கலியாண முறை.

(கலியாணஞ் செய்து வையுமே-என்ற மெட்டு)

பல்லவி.

கலியாணஞ் செய்து கொள்ளுவீர் நற்
கருத்துடன் வாழ்க்கையின் பொருத்தமார் பூவையை (கலி)

சரணம்.

1. அருத்த மற்றசெய லனைத்தையும் விட்டு
அங்கு கூடியோருடன் ஆனந்தப் பட்டு
விருத்திக்கேது உபந் யாசங்கள் கேட்டு
வேண்டுமெங்கல வஸ்து காங்களிற் பெற்று (கலி)

2. கற்றவர் சுற்றத்தார் கூடிய மன்று
காதலன் காதலி அருகினில் நின்று
"நற்றவ உமதரும் சாட்சியி லின்று
நாயகன் நாயகி ஆனோம்" புகன்று (கலி)

3. ஒருதுணை அவரவர் பெற்றதைக் காட்ட
ஒருசிறு அணிதனை இருவரும் மாற்ற
அருகினில் வருபவர் மலர்பல தூற்ற
அறிவுறு நும்புகழ் அனைவரும் சாற்ற (கலி)

## 9. ஆலய அவஸ்தை

(சங்கல்பமே-மெட்டு)

பல்லவி.

சங்கடமே சாதாரணமா
சாமிகோ யிலின் பூசாரி கையில் (சங்)

அநு பல்லவி.

வெங்காயமாய் வீசுவார் பூஜை
விரும்பில் தூயோர்பூஜை துரும்பெனத் தள்ளுமோ (சங்)

சரணம்.

பன்னீர்பால் நல்தேனை பக்தியா லீவோனை
கண்ணிலாப் பூசாரி 'காசுதா' என்பான்
நன்னுன் மறை நீதியி தாமோ
நல்லவர் கீழ்நின்று அல்லவ ரைவேண்டல் (சங்)

## 10. ஆலயப்பிரவேச மில்லார்.

(கொஞ்சஞ் சங்கடமா-மெட்டு)

பல்லவி.

இந்தச் சங்கடமேன்? உள்ளே
ஏகலா காதென்று வேகமாய்ச் சொன்னபின் (இந்த)

அநுபல்லவி.

பால் பழஞ் சீனி பகவானுக் கீந்து
பார்க்க முடியாதே நிற்கின்றீர் சோர்ந்து (இந்த)

சரணம்.

கோவிற் பெருச்சாளி சாமிக் கஞ்சாது
கூறுமிவ்வாக்கிய மென்றும் பொய்க்காது
நாவிற்றோன்றுவது மந்த்ர மாகாது
நல்லொழுக்க மின்றே லாம்பலன் யாது?
மனமொழிமெய் தூய்மையதாய் நீர்கொண்டு வாழ்வீர்
மறை மொழியை ஓதுவாரில் ஏன்நின்று தாழ்வீர்
சித்தங் கோரிய படியே
அத்தன் நேரருள் தருவான்
தத்தம் வாழ்மனை களிலே
நித்தம் பேரறம் புரிவதே
போதுமே குறள்ஓதுமே கொலைவேதமே தரும் குரோதமே
ஆகாதெனத் தெரிவதை நீத்திடும்
வாகாய் நலந் தருவதைச் சேர்த்திடும்
அமிழ்தினும் சுவைதரும் தமிழ்மொழி சுகம்பெறும் (இந்த)

## 11. தற்சார்பு.

(இசைந்த ஏறும்-மெட்டு)

உறைந்த மாசின் கரித்துணி வேஷ்டியும் உதிர்நீரும்
உலர்ந்த நெஞ்சம் உலகினைக் கீழ்என உரைநாவும்
நிறைந்த சோறுண் வாயினில் வெற்றிலை தருபாகும்
நிமிர்ந்து நிற்கப் பெறுபவ ரையர்ச் சகாராக
மறைந்த வேதந் தருவதற் காக விடுவானேன்
மலர்ந்த நெஞ்சின் மகிழ்தரு குணநலர் கிடையாதோ
குறைந்த நீதம் உறுவதோ தமிழ்மொழிக் குருகாதோ
குலந் தவிர்த்தே குணம் பெரிதெனும்சுய மரியாதை.

## 12. ஆலய சீர்திருத்தம்.

(நம்பினோனுனையே-என்றமெட்டு)

இன்றே சீர் தி ருத் தும் உமக்
கிந்து மார்க்கம் சொந்த மானல் (இன்றே)

1. நன்மை உண்மை யீகை நெஞ்சர்
நாகரீக முள்ளோர் துஞ்ச
புன்மையே புரியும் வஞ்சர
பூசை செய்ய ஆசை கொள்வதேன் (இன்றே)

2. பிறப்பிலே உயர்வு தாழ்வு
பேதமில்லை என்றே வாழ்வு
சிறப்புறவே கூறிப் பாழ்வு
டம்பி னை "அவ் விடஞ்செல்" என்பதை (இன்றே)

3. "வேதஅர்ச்ச னை"யுரைத்து
விரும்பியேதேங் காயெடுத்து
பாதைகால்ப டியுடைத்து
பங்கி ரண்டாய்த் தந்து நிற்பதை (இன்றே)

4. ஆசை மேள தாளம் போட
அடியார் கூட்டப்பக்தி யோட
வேசை யர்கள் நடனமாட
விற்ப னருமே அற்ப ராவதால் (இன்றே)

5. பெரிய வல்ல சக்தி ஒன்றை
பெண்டாட்டி பிள்ளைகள் என்றே
சிறியவஸ்துவாகக் கொண்டே
சேதிப் பதைநீர் பாகித் துநின்று (இன்றே)

## 13. பிறமணர் போஜனம்.

(கலிலோ-என்ற மெட்டு.)

பல்லவி.

உழையா தொரு மரபினர் தனிப்பட
உண்டுறங் குதல் நீதியோ-பிறரைநம்பி (உழை)

அநுபல்லவி.

பிழையா திகள் பொறுவெனக் காணிக்கைப்
பொருளாகக் குவித்தவற்ருல்-பொங்கல்சமைத்து (உழை)

சரணம்.

சாமி என மனமே நிரம்பிப்பொய்ச் சாஸ்திரங்களை நம்பி
பூமிதனைஉழுவதின்வருகிற பொருள் தனைக் கொடுத்துவெம்பி
மாமிபழங் தமிழ்முறைமருகன்முன் மறைவதுபோல்ஒதுங்கி
[மனம் வெதும்ப (உழை)

துரிதம்.

தேவர்க்கேவந்த காணிக்கைப் பொருள்
யாவர்க்கும்பொதுவே
பாவச்செயல்கள் புரிபெரும்வயிறர்
மேவலாகுமே இதுவே
நோவுற்றிடுபல் கூன்குருடர்க்கிதை நித்யமும்
அளிப்பதுவே-தகுதியன்ரோ (உழை)

## 14. தீர்த்தம்.

(கழுதுமலைகீத நாம்நோர்ய்-என்ற மெட்டு.)

பல்லவி.

யாதுப லன்கண்டீர் நீரே க்ஷேத்ர
யாத்திரை தீர்த்தங்க ளாடிவந் தீரே (யாது)

அநுபல்லவி.

1. நடந்து கால்களும்நோக நலிந்துடல் கைப்பொருள் சாக (யாது)

2. தீர்த்தம் புண்ணியமென்றே தெளிப்பீர் சமுத்திரம் [நின்றே (யாது)

சரணம்.

1. சந்திர சூரிய கிரகண மென்றும்
சாமிக்கு கந்தநல் நாளிதே என்றும்
உந்திய அலையின் கடலுள் நின்றும்
ஓங்கித்தேங் காய்கனிகள் வீசிஎறிந்தும்
ஒருபுதுசிறுபலனில்லை உடம்பினிலுலர்தல் தொல்லை
சிரசுநீர்த்தோஷம்தொல்லை செல்லுவீர்சத்தியஎல்லை (யாது)

2. உடலிலிருக்கின்ற ஊத்தைகள் யாவும்
கடலுள்மூழ்கிற்க சிந்தோடிப் போகும்
திடமானஉண்மைய றியாத னேகம்
சாஸ்திரமென்றேசில் நாட்களில் மூழ்கும்
தர்ப்பணம் எனவே கூறீர்
தர்ப்பைப்புல் கைச்சேரீர்
சாஸ்திரம் புரட்டுகள் கோரீர்.
சமத்துவ மறியவே வாரீர் (யாது)

## 15. மறை.

(கோம்மி)

1. வெள்ளைக்கா கிதத்தில் கையெழுத்துவைக்க
வேண்டியே ஒருவன் கேட்டுநின்றால்
கள்ளத்தனத்தை உணர்ந்து அம்மூடனைக்
கடிந்துபேசுதல் நீதமன்றோ.

2. பார்க்கவுங்கேட்கவுங் கூடாதபழம்
பார்ப்பனர்கைப்பொருள் வேதத்தைநாம்
ஆர்ப்பரித்துநின்று போற்றிப்புகழுதல்
அறிவுக்கழகாமோ வீரர்களே

3. ஆடுகுதிரைநல் மாடுகளைவெட்டி
யாகங்கள்வளர்ச ரித்திரத்தை
மூடர்கள்போலநாம் ஏற்றிடின்நமது
முடிவென்னகுமோ வீரர்களே.

4. கண்டதைக்கேட்டதை ஆராய்ந்துயுக்திக்
கெட்டியவரையில் நல்லதாயின்
கொண்டதைக்கொள்கையாப் நாட்டினர்க்குந்தினம்
கூறிவருவோமே வீரர்களே.

5. அறியாதுநாம் நம்புதலைவிட்டு
அறிந்தறிந்துநாம் வழிபட்டு
விரிவானபுவி முன்னேற்றத்தில் தமிழ்
நாட்டினைச்சேர்ப்போம் வீரர்களே.

## 16. சரியற்றவை.

(முத்திநெறி-என்ற மெட்டு.)

1. வித்தகரே ஆலயத்தை வலமாக நீர்வந்தீர்
சுத்தமில்லாக் குழிநீரைச் சுவைத்தீர்நல் தீர்த்தமென்றீர்
பத்திஎன்றே உடம்பிற்குப் பாவங்கள் புரிகின்றீர்
பித்தரைப்போல் அசுத்தத்தைப் பானஞ்செய்தல் சரியாமோ

2. பூமியிலே மக்களெல்லாம் பிறப்பிலென்றும் சமமாகும்
காமிகளாய்த் தோஷிகளாய்க் கள்குடித்துக் கற்றழுவும்
நேமிகளைக் கௌரவித்து நிலமீதே வீழ்ந்து வாழ்த்தி
சாமி எனச்செப்புகின்றீர் சரியாமோ அறிவீரே

3. மக்கள்பல பாலின்றி மனம்வாடும் இன்னுளில்
அக்கம்பக்கச் சிறுவருக்கு அளிக்காதே சுமந்துசென்று
நக்கியுடல் பிழைக்கும்சில நாய்களின்வி ருத்திக்காக
கற்களின்மே லேபொழிதல் கருத்திற்குச் சரியாமோ

4. ஜாதிபேதம் பாராட்டிச் சமயமூலம் சண்டையிடும்
பேதைகளும் தத்தமக்குப் பெறவிரும்பும் சமதர்ம
நீதிதனை ஒழுங்கின்றி நிர்ணயிக்கும் ஆபாச
கோதுமிகு மனுதர்மம் கொள்ளுவதும் சரியாமோ

## 17. தகனக்கிரியை.

(பதஞோன்பதாம் நூற்றுக்குமேல் மெட்டு)

1. செத்தவரைச் சாத்திரத்தால் சிரிக்கவேநாம் செய்வோமென்று
வித்தகத்தி றமுணர்ந்த வேதம்பார்ப்பார் சொல்லில்நின்று
விருத்திக்கு ஆதரவா யிருந்த பொருள்
வீணுகப் போகுதேஇத் தமிழர்மருள்

2. இறுதிச்ச டங்கு என்று இயற்றிமு டிப்பதற்கு
இறந்தவரு மறியாத இந்து ஆர்ய மொழிஎதற்கு
இனிமைத்த மிழ்மொழியே அவர் அறிவார்
இரைச்சல்தரு மாரியத்தை யாரறி வார்?

3. அரிசிநற் காய்கறிகள் ஆவின்பால் நெய் பழம்பருப்பு
வரிசையாய் நாம்இலையில் வைத்தபடி யேயிருக்க
இறந்தவ ரங்கு வந்து அருந்த மாட்டார்
ஏமாற்றுப் புரோகிதரே கொண்டு சேர்ப்பார்

4. தண்ணீர்பூ ரணகும்பம் தக்ஷிணைச மர்ப்பிக்கின்றீர்
எண்ணியே யிவற்றிற் கெல்லாம் ஏதுகா ரணத்தைக்கண்டீர்
அனைத்தும்பு ரோகிதனின் திருட்டுத் தனம்
அர்த்தமற் றசெயலைத் துரத்து தினம்

5. ஞாபகச் சின்னமாக நாட்டுவோம் போட்டோ விடுதி
பூஜையே ஒன்று செய்து போற்றி நிற்றலே தகுதி
ஏழைகட் கன்றுசாத மளித்திடுவோம்
எங்குமிவ் வியக்கத்தைநாம் பரப்பிடுவோம்

## 18 சூத்திரப்பட்டம்.

(பாரினிலேபுகழ் பாரத புத்திரரே-மெட்டு)

1. எத்தனை நாளாக நாமும்பொ றுத்திருப்போம்
[எது பதிலுங் கூருது
சித்தங் கொதிக்குதே செவியிற் கேட்கையில்
பித்தர்கள் சூத்திரர் என்றுபி தற்றிடில்
சுத்தமு ழுமூடர் போலவே மானங்கெட்டு
|நாம் சும்மாயிருப்பதா (எத்)

தொகையரு.

அர்த்தமே தெரியாது அலைந்தநாள் போது மினி
[ஆண்மையே பூண்டு வாழ்வோம்
பரத்தையர் மகன் என்னும் சூத்திரப் பெயரினைப்
[பகர்வார்கள் பொன்ற ஆள்வோம்

பாட்டு

2. மானம் பெரிதன்றி உயிரும்பெ ரிதுஅல்ல
[இந்த மண்ணுல கவாழ்வில்
மாடுகள் காகமும் தம்மினம் நேசிக்க
மாந்தர் தம்மினத்தைத் தூஷித்தலைவரேல்;
நாயினுங் கேவல மாகவே வாழுகின்றார்
[இதை நசுக்கிக் கொல்லுவோம் (எத்தனை)

தொகையரு

சூத்திரன் என்று கூறுவோனைக்கண்டால் நம்
|சூரத்தனத்தை நாட்டுவோம்

ஆத்திரங்கொண்டு அன்னவர் நாரியர்
[அகிலத்தின் வாழ்வைக் காட்டுவோம்

பாட்டு

3. வம்பனே ஊரை வைது அலையுமவன்
[எனும் வார்த்தையும் பொய்க்குமோ
வாழவிரும்பிடில் வாசையை நீக்குக
வைது அலைவார்க்கு இருகை தூக்குக
வார்த்தைகள்கேவல மாகவே பேசுகின்றார்
வேரி லறுத்துக் கொல்லுவோம் (எத்தனை)

## 19. ஹிந்தி.

(மலடிவயிற்றுமகன்போல-என்ற மெட்டு.)

1. பட்டுடன்பருத்தியே நமது ஆடை நல்ல
பைந்தமிழ்மொழியே நமது பாடை நாம்
படிக்கும்சொல் ஆங்கிலம் பாரின்பாடை இது சரிநீதி

2. அரசியற் பாடையு மதுவாக்கி நமக்
கன்னியமெனுங்தோற் றத்தைநீக்கி பிறர்
ஆதரவின்வழி உண்டாக்கி தமிழ் நிலமீது

3. வளர்ந்து கலந்து வரும் போது மறை
வடமொழிக்கிங்கவ சரமேது இது
வாழ்விற்குத் தந்திடும் பலன்யாது தினம் இதையோசி

4. நாட்டினி லாட்டுக்குட்டிக்கன்பு தர
நரியும்புலியும் நிறையிலொன்று சிறு
நலம்புரி உயிர்கள் இரண்டுமன்று எனத் தெரிவீரே

5. அன்னியம் ஆங்கிலம் ஒன்றன்று இன்று
அடுத்துவரும் ஹிந்திஅதில் ஒன்று நமக்
காதாரமிரண்டும் அளிப்ப தன்று அனுபவ பாதை

6. பிறந்தமொழியையே சொல்லுவோமே நாம்
பழகிய மொழியையுங் கொள்ளுவோமே இனிப்
புதிதாகவருவதைத் தள்ளுவோமே பெருந்தொல்லை
[நீக்க.

## 20. புரோகித வரி.

(நொண்டிச்சிந்து.)

செந்தமிழ் நாட்டினரே நாமே
செலுத்தும்புரோகித வரிவிபரம்
இன்றிங்கே கூறுகிறேன், இதனை
ஏற்றிடும். அவசியமுளதோ பாரும்
சாந்திமுகூர்த்தமென்றும் அன்று
சதிபதி சந்தோஷமாய்ச் சேருவதற்கும்
தாம்கரு வுறுவதற்கும் அங்கு
தவறுகள் நேரிடாது தடுப்பதற்கும்
இதன் பின்னர் சிறுவலியால் கொடிய
இடையூறு வாராது தடுப்பதற்கும்
தேரைத வளைகண்டால் அவை
தீமைபயக்காதெனச் சொல்லுவதற்கும்
குழந்தைபிறந்தவுடனே அதுவும்
குணதோஷம் கொண்டதென்று நீக்குவதற்கும்
மாந்திரைப் போக்குவதற்கும் பின்பு
மயிரைமுதல் முதலாய்க் கழிப்பதற்கும்
காதுகள் துளைப்பதற்கும் மனது
களிப்புடன் பெயரிட்டு அழைப்பதற்கும்
பள்ளியிற் சேருவதற்கும் ஆங்கு
பலபல வித்தைகளாரம்பிப்பதற்கும்
பூணூல்கள் போடுவதற்கும் இவன்
புண்ணியவானெனக் கணிப்பதற்கும்

ஜாதகம் பார்ப்பதற்கும் இவன்
சாமர்த்திய வானென்று சொல்லுவதற்கும்
பெண் ருது வாகி நின்றால் இதனால்
பிழையொன்று மில்லை எனப் புகல் வதற்கும்
நல்ல நாள் பார்ப்ப தற்கும் இவட்கு
ஸ்நானம் செய்து நடுவீட்டிற் சேர்ப்ப தற்கும்
மங்கள ஸ்நானத்திற்கும் மேலும்
மற்றுமுள்ள தீமைகளை நீக்குவதற்கும்
பிரயாண நேரம் பார்க்கவும் அங்கே
பறந்துவரும் கருடன் தடைநீக்கவும்
முகூர்த்தமார் நாள் நோக்கவும் சார்ந்து
மாங்கிலியம் கால் நட்டிக் கட்டு வதற்கும்
முந்திய சாந்தி முகூர்த்தம் பின்னும்
முறை முறையாக வரும் கிரியை கட்கும்
வாழ்வில்வி யாதி வந்தால் அதனை
வருத்தநல் மருந்துக ளருந்துதற்கும்
காரிய பங்கமானால் வந்த
கஷ்டத்தை நீக்குதற்கு முறை தேடவும்
கவலைக்கு இடம் நேரில் கோவிற்குக்
காவடி பூஜைஎன்று கணக்கிடவும்
சாந்திகள் செய்து கொள்ளவும் எண்ணில்
அடங்காத சாமிகட்குப் பூஜைபோடவும்
சாஸ்திரம் பார்க்கின்றோம் வெகு
சந்தோஷ வாழ்வு வரி செலுத்து கின்றோம்
வாழ்ந்தவ ரிறந்துவிடின் அவரை
வானுலகஞ் சேர்ந்திடச் செய்வதற்கும்
பிந்திய நாட்களிலும் அவரின்
புத்திரர்க ளாலே மனம் நோவாமைக்கும்

பிரதி வருடத்திலும் ரசீது
பெற்றுக்கொள்ளா தீர்வையாய்ச் செலுத்துகின்ற
புரோகித வரிக்கு நிகர் இந்தப்
பூமியை ஆள்பவர்க்கும் செலுத்தவில்லை
இத்தனை வரிகள் ஏனோ இதனைச்
செலுத்தலால் நாம் பெற்ற பலன் யாதோ
உணர்வீர் தெரிவீரே என்றும்
உத்தமமொழுங்கானதைப் புரிவீரே (செந்தமிழ்)

முற்றிற்று.

---

கூடிய சீக்கிரம் 2-ம்பாகம் வெளிவரும்.

Solden & Co., Madras, S.E.

# திருக்குறள்-அறம்,

## உண்மை உரை.

---

ஆசிரியரின் கருத்தைத்தெளிவாகக் காட்டுவது, ஆரிய சித்தாந்தங்கொண்டு பரிமேலழகர் இயற்றிய உரையை அநேக பாக்களில் விலகி யாவரும் ஒப்பும் நிலையில் விளங்குகிறது. யாவரும் எளிதில் கற்கும் இனிய நடையில் வரைந்துள்ளது. பண்டிதர்கள் பலரும் ஒப்புக்கொள்ளும் தன்மை பெற்றது.

ஒரு பிரதி ரூ. 1-க்கு வாங்கி, தமிழரின் நாகரிகம், கல்வி, உயர்வு, ஒழுக்கத்தை நன்கு அறியுங்கள்.

விலாசம்: —முன்பக்கம்

Golden & Co., Madras, S.E.